Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.107/2025

Dated 01-04-2026
Deposition of witness for : PW 8

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தமிழ்மணி | வயது | : | 43 |
| தந்தை பெயர் | : | கலியபெருமாள் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | தஞ்சாவூர் | தொழில் | : | அரசு மருத்துவர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused 1,2,3 absent 355 BNSS Petition filed and allowed.**

Ld.D. **Counsel Present**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது தஞ்சாவூர் மருத்துவகல்லூரி மருத்துவமமைணயில் சட்டம் சார்ந்த மருத்துவதுறையில் பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன்.

2) இதே துறையில் கடந்த 30.6.2018 அன்று பணியில் இருந்தபோது செங்கிப்பட்டி காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதத்தின் கு.எண்.102/2018 வழக்கில் சம்பந்தப்பட்ட

சுமார் 55 வயது மதிக்கதக்க ராஜேந்திரன் என்பவரது ஆண் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய வேண்டி வேண்டுகோள் கடிதத்தை மதியம் 12.50 மணியளவில் காவலர் எண்.1384 திரு. பிரான்சிஸ் என்பவர் மூலம் பெற்று அவர் பிரேததத்தை அடையாளம் காட்டினார். அந்த வேண்டுகோள் கடிதம் கோப்பில் இல்லை என்பதால் மருத்துவரிடம் இருந்து பெற்று தாக்கல் செய்யப்பட்டது. அது **அ.சா.ஆ.5** ஆகும்.

3) நான் அதே நாளில் மதியம் 1 மணியளவில் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்ய ஆரம்பித்தேன்.

4) அப்போது பிரேதமானது மிதனமான உடல் வாகுடன் உடல் முழுவதும் மரண விரைப்பு தன்மையுடன் இருந்தது. கை கால் நகங்கள் ஊதா நிறத்தில் இருந்தது. கழுத்தின் முன் பகுதியில் செயற்கை சுவாச துவாரம் காணப்பட்டது.

5)இறப்பிற்கு முன்பு ஏற்பட்டிருந்த காயங்கள்

1) தையலிடப்பட்ட அறுவை சிகிச்சை காயத்தின் அளவு 31x1 செ.மீ. எலும்பு வரை ஆழத்தில் இடது முன் பக்க வாட்டு தலை பகுதியில் காணப்பட்டது.

2) தையலிடப்பட்ட சிதைந்த காயத்தின் அளவு 4x1x1 செ.மீ. அளவில் இடது முன் தலையிலும் மேலும் 1x1x1 செ.மீ. அளவில் முன் நடு தலையிலும் காணப்பட்டது.

3) தையலிடப்பட்ட சிதைந்த காயத்தின் அளவு 4x0.5x1 செ.மீ. அளவில் இடது ஆட்காட்டி விரலில் காணப்பட்டது.

4) கன்றிய காயம் 3x3 செ.மீ. அளவில் வலது காதில் பின்பகுதியில் காணப்பட்டது.

5) கன்றிய காயத்தின் அளவு 6x4 செ.மீ் அளவில் இடது கையின் புறங்கையில் காணப்பட்டது.

6) சிராய்ப்பு காயங்கள் கரும் பழுப்பு நிறத்தில் கீழ்கண்ட உடல் பாகத்தில் காணப்பட்டது.

1) 3x2 செ.மீ. அளவில் வலது கால் முட்டியின் வெளிபகுதியிலும் 2x1 செ.மீ. அளவில் இடது முன் தோள்பட்டையிலும் 2x2 செ.மீ. அளவில் இடது தோள்பட்டையின் பின்பகுதியிலும் காணப்பட்டது.

7)தலையை திறந்து பார்க்கையில் தலை தோல் முழுவதும் கன்றி இருந்தது. இடது முன் பக்கவாட்டு தலை எலும்புகள் 17x15 செ.மீ் அளவில் அறுவை சிசிச்சை மூலம் அகற்றப்பட்டு காணப்பட்டது. அருகில் உள்ள மூளை தெரியும் படி காணப்பட்டது. இது அறுவை சிகிச்சை காயம் ஆகும்.

8)தலை எலும்பு உடைவு 19x11 செ.மீ அளவில் இரண்டு முன் தலை எலும்புகளிலும் மற்றும் வலது பக்க தலை எலும்புகளிலும் காணப்பட்டது. மூளை முழுவதும் ரத்த கசிவு காணப்பட்டது. பெருமூளையின் அடிப்பகுதியில் ரத்தம் உறைந்து காணப்பட்டது. இரண்டு பக்க பெருமூளையில் முன் பகுதி கன்றி போய் இருந்தது. மிருதுவாகவும் காணப்பட்டது. மூளை வீக்கத்துடன் காணப்பட்டது.

9_தலை எலும்பின் அடிப்பாகத்தின் முன் தலை எலும்புகள் உடைந்து காணப்பட்டது. மற்ற உடல் உள் உறுப்புகளான இதயம், ரத்தகுழாய்கள் நல்லநிலையில் இருந்தது. நாவடி எலும்பு நல்லநிலையில் இருந்தது. இரைப்பை காலியாக இருந்தது. வாடை எதுவும் இல்லை.

நுரையீரல்கள், கல்லீரல், மண்ணீரல் மற்றும் சிறுநீரககங்கள் நல்லநிலையிலும் அதன் குறுக்கு வெட்டு தோற்றத்தில் ரத்தம் தோய்ந்து காணப்பட்டது.

10) சிறுகுடல் காலியாகவும் வாடை எதுவும் இல்லாமல் இருந்தது. சிறுநீர் பையில் 10 மில்லி அளவில் சிறுநீர் இருந்தது. முதுகுதண்டுவட எலும்பு நல்லநிலையில் இருந்தது. உடல் உள் உறுப்புககள் ரசாயன பகுப்பாய்வுக் அனுப்பி வைக்கப்பட்டது. அந்த ரசாயன பகுப்பாய்வு அறிக்கையில் விஷம் ஏதும் கண்டறியப்படவில்லை குறிப்பிடப்பட்டிருந்தது.

இறப்பிற்கான காரணம்

விஸ்ரா அறிக்கை மற்றும் செரலாஜிக்கல் அறிக்கை ஆகியற்றை பார்வையிட்டேன். இறந்தவர் அவருக்கு ஏற்பட்ட தலை காயங்களின் பின்விளைவுகளினால் முக்கிய உறுப்பான மூளையில் அடிப்பட்டு மற்றும் செயல் இழந்து இறந்திருக்க கூடும் என்று சான்று வழங்கினேன். நான் வழங்கிய பிரேத பரிசோதனை சான்று இறுதி கருத்துரையின் கூடியது இதுதான். அது **அ.சா.ஆ.6** ஆகும். அந்த விஸ்ரா அறிக்கை இதுதான். அது **அ.சா.ஆ.7** ஆகும். அந்த செரலாஜிக்கல் அறிக்கை இதுதான் அது **அ.சா.ஆ.8** ஆகும்.

காவல் ஆய்வாளர் என்னை இது குறித்து விசாரித்தார்கள்.ங

எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

இல்லை என வழக்கறிஞரால் தெரிவிக்கப்பட்டது.

VELMURUGAN P

Digitally signed by VELMURUGAN P
Date: 2026.04.01 21:11:42 +0530